IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.278/2023
DEPOSITION OF WITNESS

வா.சா. 1 சாட்சி லட்சுமணன் த.பெ.அழகர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 26.08.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1.நான் இவ்வழக்கில் பிரதிவாதிகளின் தந்தைக்கு பணம் கொடுத்ததாக எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வா.சா.ஆ.8 உழவடை பத்திரம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.8 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 8.12.2010 ஆகும். வா.சா.ஆ.8 ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் பிரதிவாதியின் தந்தை பழனி ஆகும். மேற்படி ஆவணத்திற்கு முத்திரைத்தாள் வாங்கியது யார் என்றால் மேற்படி பழனிதான்.

2. வா.சா.ஆ.8ல் யார் சாட்சி கையொப்பம் செய்தது என்றால் தோப்பூரைச் சேர்ந்த சடாச்சரம், மதுரை பழங்காநத்தத்தை சேர்ந்த சோலைமலை ஆவார்கள். மேற்படி இருவரும் எனக்கு உறவினரா என்றால் இல்லை. சாட்சி கையொப்பம் செய்ய யார் அழைத்து வந்தது என்றால் சோலைமலை ஆவார் அவர் எனது பங்காளி ஆவார். அவர் எங்களை பார்க்க வந்திருந்தார் அப்போது சாட்சி கையொப்பம் போடச்சொல்லி பழனி கூறியதின்பேரில் கையொப்பம் செய்தார். சடாச்சரமும் பழனி கூறித்தான் கையொப்பம் செய்தார்.

3. மேற்படி இருவரையும் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் சடாச்சரம் இறந்துவிட்டார். சோலைமலையை விசாரிக்கலாம். வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரை உள்ள கணினிச்சிட்டாவை பார்த்து அதில் உள்ள சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கணினிச்சிட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் ஊர்ஜிதத்தில் இருந்த காலத்தில்தான் வா.சா.ஆ.8 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.8 தவிர்த்து அதற்கு முன்போ, அதற்கு பின்போ நாங்கள் பிரதிவாதிகளின் தந்தைக்கு தொகை கொடுத்ததாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் மோசடியாக என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு பிரதிவாதிகளின் தந்தைதான் விபரம் கூறியதாகவோ, முத்திரைத்தாள் வாங்கியதாகவோ, சாட்சி கையொப்பம் செய்ய அழைத்ததாக கூறுவது அனைத்தும் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதிகளின் தந்தை எந்தக்காலத்திலும் எவ்வித தொகையும் பெறவில்லை என்றும், அவர் எந்தவிதமான உத்தரவாதம் எங்களுக்கு தரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தந்தை எப்போது காலமானார் என்றால் 2018 ஆகும். பிரதிவாதிகளின் தந்தை உயிருடன் இருக்கும்வரை அவரிடம் வா.சா.ஆ.8 ஆவணத்தை காண்பித்து எவ்வித கோரிக்கையும் நாங்கள் கேட்கவில்லை என்றால் கேட்டோம், அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று கூறிவிட்டார்.

6. பிரதிவாதிகளின் தந்தை இறந்தபிறகு நாங்கள் வழக்கிற்காக வா.சா.ஆ.8 ஆவணத்தை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. தாவா 1ம்இலக்கச் சொத்தின் பழைய சர்வே எண் 73/8 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 2ஏக்கர் 85 செண்டு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் 1வது இலக்கச் சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 18 செண்டு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் 85 செண்டு M.K.S. பெரியசாமி என்பவருக்கு கிரைப்பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

7. மேற்படி M.K.S. பெரியசாமியிடமிருந்து பிரதிவாதிகளின் தந்தை பழனி மேற்படி சொத்தின் வடபுறம் 39 செண்டை ஒத்தியாக 1975ல் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி 39 செண்டை பின்னிட்டு பழனி என்பவர் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 39 செண்டு சர்வே எண் 73/8B1என்று மாறியது என்றால் சரிதான். தற்போது சர்வே எண் 73/12A1A1A என்று உள்ளது என்றால் சரிதான்.

8. மேற்படி சர்வே எண் 73/12A1A1Aன் மொத்த விஸ்தீரணம் MP கார்டன் என்ற பெயரில் வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டு அதற்கு உரிய அனுமதியும் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்து மனைகளாக பிரிக்கப்பட்டு அதில் சாலைகள் அமைக்கப்படுவதற்கு ஊராட்சிக்கு நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்திற்கு வா.சா.ஆ.5 கணினிச்சிட்டாவில் பிரதிவாதிகளின் தந்தையை தவிர 4நபர்கள் கூட்டுப்பட்டாதாரராக உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கூட்டுப்பட்டாதாரர்களுக்கு மேற்படி சொத்தில் உரிமை உள்ளதா என்றால் இல்லை.

9. 1வது இலக்கச் சொத்து முழுமையாக பிரதிவாதிகளின் தந்தைக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று வா.சா.ஆ.5 ஆவணம் மூலமே தெரியவருகிறது என்றால் சரியல்ல. 1வது இலக்கச் சொத்து மனைகளாக பிரிக்கப்பட்டு அதன் அமைப்பு வீட்டடி மனையாக உள்ளது என்றால் சரிதான்.

10.2வது இலக்கச் சொத்திற்கும், வா.சா.ஆ.4 சிட்டாப்படி 6நபர்கள் கூட்டுப்பட்டாதாரர்களாக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி சிட்டாவில் உள்ள நபர்களில் பிரதிவாதிகளின் தந்தையை தவிர்த்து மற்ற நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா 2வது இலக்கச் சொத்தில் அங்காள ஈஸ்வரி சின்னச்சாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலை சுற்றி வேப்பமரம், மற்ற மரங்கள், கிணறு, மோட்டார் பம்பு செட் உள்ளது என்றால் சரிதான்.

11. தாவா 3ம்இலக்கச் சொத்தான சர்வே எண் 73/13 என்பது சர்வே எண் 73/8லிருந்து பிரிந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி பிரிக்கப்பட்ட வீட்டடி மனைகளில் 3ம்இலக்கச் சொத்தும் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டதில் மனை எண் 42ஐ இராமலிங்கம் என்பவர் 1973ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி இராமலிங்கம் மனை எண் 42ஐ சுலோச்சனா என்பவருக்கு கிரையம் கொடுத்திருப்பார் என்றால் கொடுத்திருப்பார். மேற்படி சுலோச்சனா என்பவர் பத்மா என்பவருக்கு 1997ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன்.

12. மேற்படி பத்மா என்பவர் 2ம்பிரதிவாதி முத்துக்குமாருக்கு மனை எண் 42ஐ 3.8.2005ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் 2ம்பிரதிவாதி முத்துக்குமார் பெயரில்

பட்டா பெயர் மாற்றமாகியுள்ளது அதுதான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். 3ம்இலக்கச் சொத்து முள்புதர்ஆக உள்ளது என்றால் சரிதான்.

13. 4வது இலக்கச் சொத்தாக சர்வே எண் 73/18 என்பது சர்வே எண் 73/8லிருந்து பிரிந்து வந்தது என்றால் சரிதான். 4வது இலக்கச் சொத்தும் வீட்டடியாக பிரிக்கப்பட்டுள்ளதற்கு கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனை எண் 48ஐ கோமதி என்பவர் 1973ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. மனை எண் 49ஐ கஸ்தூரி என்பவர் 1973ல் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் தெரியாது. மனை எண் 47ன் உரிமையாளர் சண்முகம் (எ) சண்முகசுந்தரி ஆவார் என்றால் சரிதான். மேற்சொன்ன கோமதி, கஸ்தூரி, சண்முகம் (எ) சண்முகசுந்தரி ஆகிய 3பேரும் அவர்களது சொத்தை பராமரிக்க பிரதிவாதிகளின் தந்தை பழனி என்பவரை அவர்களது பொது முகவராக 17.2.2003ம் தேதியில் நியமித்தார்கள் என்றால் சரிதான்.

14. மேற்சொன்ன அடிப்படையில் பழனி என்பவர் 3மனைகளையும் 1ம்பிரதிவாதியின் மனைவி சொர்ணலதா என்பவருக்கு 3.8.2005ம் தேதியில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொர்ணலதா அவரின் கணவரான 1ம்பிரதிவாதிக்கு மேற்படி மனைகளை 2006ம் வருடத்தில் தானசெட்டில்மெண்ட் ஆவணமாக கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உரிமையின் அடிப்படையில் 1ம்பிரதிவாதிக்கு பட்டா பெயர் மாற்றமாகியுள்ளது என்றாலும், அதற்குரிய கணினிச்சிட்டாதான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான்.

15. தாவா 4ம்இலக்கச் சொத்தில் 1ம்பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு 1ம்பிரதிவாதி பெயரில் வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டின் கதவு எண் 7/65

என்றால் சரிதான். மேற்படி 7/65ல்தான் 1ம்பிரதிவாதிக்கு முகவரி அடையாள அட்டை உள்ளது என்றால் சரிதான். மேற்படி 4ம்இலக்கச்சொத்தில் ஊராட்சியால் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. 5ம்இலக்கச் சொத்து பழைய சர்வே எண் 73/5 என்றால் சரிதான். தாவா 5ம்இலக்கச் சொத்திலும் மேற்சொன்ன வீட்டு மனைகளும் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5ம்இலக்கச் சொத்தில் தென்னைமரங்கள் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. தாவா 5ம்இலக்கச் சொத்திற்கும் கூட்டுப்பட்டாவில் சடாச்சரம், பழனியப்பன் பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சடாச்சரம், பழனியப்பனை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

17. 6ம் இலக்கச் சொத்திற்கு நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கணினிச்சிட்டாவில் 6 நபர்கள் உரிமையாளர்களாக உள்ளனர் என்றால் சரிதான். அதில் கண்ட பிரதிவாதிகளின் தந்தை பழனியை தவிர்த்து மற்ற நபர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 6ம்இலக்கச் சொத்து பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்து ஆதியில் முத்தையாபிள்ளை மகன் பழனி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

18. 6ம்இலக்கச் சொத்தில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிள்ளையார் கோவிலைச் சுற்றி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் தாவாச் சொத்துக்கள் விவசாயம் செய்யக்கூடிய சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19. நானோ, எனது தந்தையோ தாவாச் சொத்தில் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்களின் உட்பிரிவுகள் 2020– 2021காலகட்டத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகளை நான் வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதே மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தை பிரதிவாதிகளின் தந்தையால் எழுதிக்கொடுக்கவில்லை அதனால் மேற்படி ஆவணம் அவரையோ, அவரது வாரிசுகளையோ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

20. தாவாச் சொத்தை நான் எந்தக்காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றாலும், நான்தாக்கல் செய்துள்ள வரி இரசீது தவறானது என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பு பிரதிவாதிகளின் முறையான முகவரிக்கு அனுப்பாமல் தவறான முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முறையான முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தால் அவர்கள் முறையான பதில் அறிவிப்பை கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.26 15:44:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.